வரலாற்று சாதனைகளை படைத்த கலைஞர் வழி நின்று இன்றைக்கு

இந்தியாவில் சக்தி மிக்க தலைவராக முதல்வர் மு.க.ஸ்டாலின் திகழ்கிறார்!

காஞ்சிபுரம் தெற்கில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

காஞ்சிபுரம், மே.3- காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் நடைபெற்ற முதல்வர் மு..ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாள் விழா மாபெரும் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன்பேசுகையில், வரலாற்று சாதனைகளை படைத்த முத்தமிழறிஞர் கலைஞர் வழி நின்று இன்றைக்கு இந்திய நாட்டில்சக்தி மிக்கத் தலைவராக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திகழ்கிறார் என்று அமைச்சர் கே.ஆர்.பெரிகருப்பன் குறிப்பிட்டார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியம் ஓரத்தி பேருந்துநிலையம் அருகில் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் ஒன்றியக் கழகச் செயலாளர் கே.கண்ணன் வரவேற்புரையில் நடைபெற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாள் விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாபெரும் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன்பேசியதாவது:

பேரறிஞர் அண்ணா அவர்கள், ஒரு ரூபாய்க்கு மூன்று படி அரிசி என்று தேர்தல் வாக்குறுதி கொடுத்து மூன்றுபடி லட்சியம், ரூபாய்க்கு ஒரு படி அரிசி நிச்சயம் என்று கொடுத்து ,தேர்தல் வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றினார்.

அண்ணா அவர்கள் மறைவிற்குப் பிறகு அப்போது எழுதியவர்கள், பேசியவர்கள் அரசியல் விமர்சகர்கள், விற்பன்னர்கள் எல்லாம், இனி திராவிட முன்னேற்றக் கழம் என்ற அரசியல் கட்சி அழிந்து விடும், இனி திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ் நாட்டில் இல்லாமல் போய் விடும், தி.மு.க. ஆட்சி இதோடு முடிந்தது என்றெல்லாம் எழுதியவர்கள், பேசியவர்கள் உண்டு. அப்படி ஒரு நெருக்கடியான காலக்கட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அரசியல் பேரியக்கத்தினுடைய தலைமைப்பொறுப்பையும், தமிழ்நாட்டின் முதலமைச்சர் பொறுப்பையும் அன்புத் தலைவர் நம்முடைய உயிரினும் மேலான கலைஞர்அவர்கள் அன்றைக்கு பொறுப்பேற்றார்.

வரலாற்று சாதனையை படைத்த கலைஞர்!

முதலமைச்சராக பொறுப்பேற்றதோடு, திரவிட முன்னேற்றக் கழகம் என்ற அரசியல் இயக்கத்தை, அதையும் தலைமையேற்று நடத்தினார். இரு பெரும் பொறுப்புகளையும் ஏற்றுக் கொண்ட கலைஞர் அவர்கள், தொடர்ந்து ஏற்கனவே அந்தப் பொறுப்புக்கு வருகின்ற நேரத்தில் சொன்னவர்கள் எல்லாம் ஆச்சரியப்படக் கூடிய அளவிற்கு அவர்களுடைய கருத்துகளுக்கெல்லாம் எதிர்மாறாக செயல்பட்டு தொடர்ந்து 50 ஆண்டுகளுக்கு மேலாக திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அந்த அரசியல் கட்சிக்கு தலைமை வகித்தார் கலைஞர் என்றால் அது சாதாரன காரியமல்ல. 50 ஆண்டுகள் ஒரு இயக்கத்தின் தலைவராக, மாநிலக் கட்சிகளினுடைய தலைவர்கள் மட்டுமல்ல, அகில இந்திய கட்சிகளின் தலைவர்கள் மட்டுமல்ல, உலக அளவில் இது வரை 50 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை வகித்த வரலாறு இல்லை. அத்தகைய வரலாற்று சாதனையை படைத்தவர் தான் கலைஞர்.

பேரறிஞர் அண்ணா தொடங்கிய இயக்கம். 50 ஆண்டுகள் அவர் கட்டிக் காத்தார். அந்த இயக்கத்திற்கும் அதன் நிர்வாகிகளுக்கும், தலைவர் உள்ளிட்ட தொண்டர்களுக்கும்எத்தனையோ நெருக்கடிகள், அந்த நெருக்கடிகளையும் கடந்து. இந்த இயக்கத்தைக் கட்டிக் காத்த பெருமைக்குரியவர் தான் நம்முடைய அன்புத்தலைவர் கலைஞர் அவர்கள்.

50 ஆண்டு கால தலைமைப் பொறுப்பை ஏற்றது மட்டுமல்லாமல், 5 முறை தமிழ்நாட்டு மக்களுடைய பேராதரவோடு, இந்த நாட்டின் முதலமைச்சராக கலைஞர் அவர்கள் வகித்து வந்தார். அப்படி அந்தக் காலக்கட்டத்தில், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, ஏழை எளிய மக்கள் நலனில் அக்கறையுடைய முதலமைச்சராக , வறுமையை போக்கக் கூடிய , வளமான திட்டங்களை தமிழ்நாட்டில் கொண்டு வந்து, இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழ்நாட்டைத் தவிர வேறு எங்கும் இது போன்ற திட்டங்கள் இல்லை என்று சொல்லக் கூடிய அளவிற்கு, இன்னும் சொல்லப் போனால் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்து கலைஞர் அவர்கள் கொண்டு வருகிற திட்டங்கள், பிற மாநில மக்களால் மிகப் பெரிய பாராட்டுக்களை பெற்ற திட்டங்களாக இருந்தது.

பிற மாநில முதலமைச்சர்கள், கலைஞர் அவர்கள் எப்படி இது போன்ற திட்டங்களை எல்லாம் கொண்டு வருகிறார், இதற்கான நிதி ஆதாரங்களை எப்படி அவர் திரட்டுகிறார் என்பதையெல்லாம் கேட்டறிந்து அதன் பிறகு தங்களுடைய மாநிலங்களில் அத் திட்டங்களை செயல்படுத்தினர். அத்தகைய பெருமை கலைஞர்அவர்களின் நிர்வாகத் திறமைக்கு, ஆட்சி நிர்வாகத் திறமைக்கு இவைகள் எல்லாம் சான்று.

இயக்கத் தலைவராக, தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்து, ஒரு தலை சிறந்த நிர்வாகியாகவும் மக்கள் செல்வாக்கு மிக்கத் தலைவராகவும் இருந்தவர் தான் முத்தமிழறிஞர் கலைஞர்அவர்கள் என்பதை நான் இங்கே நினைவு படுத்த கடமைபட்டிருக்கிறேன்.

இப்படி கலைஞர் அவர்களால் கொண்டு வரப்பட்ட பலத் திட்டங்கள், அவர் மாநிலக் கட்சினுடைய தலைவர் தான், இருந்தாலும் கூட, கட்சியை வழி நடத்துவதிலும் சரி, ஆட்சியை மக்களுக்கு பயன் படுத்துவதிலும் சரி திட்டங்களை கொண்டு வருவதிலும் சரி, தலைசிறந்த முதலமைச்சராக, நிர்வாகியாக, கட்சித் தலைவராக இருந்தது மட்டுமல்லாமல், இந்தியாவில் ஏற்படுகின்ற ஜனநாயகத்திற்கு ஆபத்தென்றால் முதல் குரல் கொடுக்கக் கூடிய தலைமகனாக நம்முடைய கலைஞர் அவர்கள் இருந்தார்கள்.

இந்த 50 ஆண்டுகள் ஒரு கட்சியை நடத்துவது என்பது சாதாரண காரியமல்ல. ஆனால் தலைவர் கலைஞர் அவர்கள் ஜனநாயகத்தையும் பாதுகாத்து, தன்னுடைய உடன் பிறப்புகளையும் பாது காத்து, தமிழ்நாட்டு மக்களுக்கு தேவையான திட்டங்களையும் கொண்டு வந்து, செயல்படுத்தி ஒரு பண்முகத் தன்மை கொண்டவராக விளங்கினார்.

பல தலைவர்களுக்கு பேச்சாற்றல் இருக்கும், எழுத்தாற்றல் இருக்காது. நல்ல எழுத்தாளர்களாக இருப்பார்கள் பேசுவதற்கு வராது. ஆனால் தலைவர் கலைஞர் அவர்கள் ஒருவர் தான் எழுத்தாற்றல் மிக்க வராகவும், சிறந்த பேச்சாளராகவும், தலைசிறந்த மக்கள் செல்வாக்கு மிக்கத் தலைவராகவும் இப்படி பண்முகத் தன்மை கொண்ட ஒரு முதலமைச்சராக கலைஞர் அவர்கள் விளங்கி வந்தது, ஒட்டு மொத்த தமிழகத்திற்கும் பெருமை என்பதை நான் இங்கே நினைவு படுத்த கடமைபட்டு இருக்கிறேன்.

அண்ணா மறைந்தார். கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றார். திராவிட முன்னேற்றக் கழகத்தையும், தமிழகத்தையும் வழிநடத்திச் சென்றார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் வயது மூப்பின் காரணமாக நம்மை விட்டு பிரிந்த நிலையில், திராவிட முன்னேற்றக் கழகம் இனி இதோடு முடிந்தது என்று அண்ணாவின் மறைவிற்குப் பிறகு எப்படி சொன்னார்களோ, அதே போல கலைஞர் அவர்களின் மறைவிற்குப் பிறகும் சொன்னார்கள்.

55 ஆண்டு கால பொதுவாழ்விற்கு சொந்தக்காரர்!

தி.மு.க. இனி ஆட்சிக்கு வர முடியாது என்றெல்லாம் எதிரிகள் விமர்சனம் செய்த சூழ்நிலையில், இந்த இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று, தொடர்ந்து 50 ஆண்டுகாலம் கலைஞர் அவர்களைப் போல தன்னுடைய இளமைப் பருவம் முதல் இந்த இயக்கத்திற்காக உழைத்தவர் இன்றைக்கு 72 ஆண்டு வயது என்றால், 50 ஆண்டு காலம், 55 ஆண்டு காலத்திற்கும் மேலாக இந்த இயக்கத்துகு உழைத்தவர் இன்றைக்கு தி.மு.கழகத்தின் தலைமை பொறுப்பை தளபதி அவர்கள் ஏற்றிருக்கிறார்.

ஏதோ தலைவர் என்று பெயருக்கு இருப்பதல்ல, ஒரு தலைவர் அரசியல் கட்சிக்கு எப்படி இருக்க வேண்டும்? என்பதற்கு அவர் ஓர் எடுத்துக் காட்டுத் தலைவராக இருக்கிறார். அண்ணா காலத்தில் இந்த இயக்கம் தொடங்கப்பட்ட போது எத்தகைய லட்சியங்களோடு தொடங்கப்பட்டதோ, அந்த இலட்சியங்கள் இன்றளவும், கலைஞர் காலத்திலும் சரி, அண்ணன் தளபதி காலத்திலும் கொள்கையில் சிரிதும் பிரளாத இயக்கமாக திராவிட முன்னேற்றக் கழகத்தை வழி நடத்திச் செல்கின்ற ஆற்றல் மிக்க, ஒரு தைரியமிக்கத் தலைவராக செயல் மிக்கத் தலைவராக தளபதி அவர்கள் விளங்கி வருகிறார்.

அண்ணாவும், கலைஞரும் ஒரு மாநிலக் கட்சியினுடைய தலைவராக இருந்தாலும், அகில இந்தியக் கட்சித் தலைவர்கள் எல்லாம் கேட்டார்கள். தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கலைஞர் அவர்கள் இந்தப் பிரச்சினையில் என்ன முடிவெடுக்கிறார் அவருடைய கருத்துகள் என்ன? என்று கேட்டறிந்த வரலாறுகள் உண்டு.

அதைப் போல இன்றைக்கு தளபதி அவர்கள், ஒரு மாநிலக் கட்சியினுடைய தலைவர் தான். ஆனாலும் அகில இந்தியத் தலைவர்கள், தமிழ்நாட்டின்திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் தளபதி அவர்கள், அவர் என்ன நினைக்கிறார்? அவர் என்ன செய்யப் போகிறார்? என்பதைக் கேட்டறிந்து , இன்றைக்கு அவருடைய ஆலோசனையைக் கேட்கக் கூடிய அளவிற்கு உயர்ந்த ஒரு கொள்கை பிடிப்புள்ள தலைவராக இன்றைக்கு அவர் விலங்கி வருகிறார்கள்.

வலிமைமிக்க தி.மு.க. இயக்கம்!

இந்த இயக்கத்திற்கு எவ்வளவோ சோதனைகள், வேதனைகள் வந்தாலும், தலைவர் அவர்களையும் தொண்டர்களையும் பிரிக்க முடியாத ஒரு நிலை இருப்பதற்கு என்ன காரணம்.? இது கொள்கை ரீதியான இயக்கம். ஆகவே தான் எவ்வளவு பெரிய புயல், பூகம்பம், சூறாவளி வந்தாலும், இந்த இயக்கத்தை அசைக்க முடியாத அளவிற்கு இன்றைக்கு வலுவான ஒரு நிலையில் இருக்கிறது.

75 ஆண்டுகளைக் கடந்த நிலையிலும் இந்த இயக்கம் தமிழன் என்ற ஒரு இனம் உள்ளவரை திராவிட முன்னேற்றக் கழகம் என்ற ஒரு அரசியல் கட்சி தேவை. இந்த இயக்கத்தால் தான், தமிழர்களுடைய பெருமை தமிழ்மொழி பாதுகாக்கப் படும். வளர்க்கப்படும், தமிழர்களுடைய நாகரீகம் கலாச்சாரம் இவைகள் எல்லாம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்றால் இந்த இயக்கம் தமிழகத்தில் தமிழர்கள் என்ற அந்த இனம் இருக்கின்ற வரை திராவிட முன்னேற்றக் கழம் என்ற இந்த இயக்கத்தின் பணி தொடர வேண்டும் என்று இன்றைக்கு நாட்டு மக்கள் கூறிக் கொண்டிருக்கக் கூடிய சூழ்நிலையை நாம் காண முடிகின்றது.

கலைஞர் ஆட்சிக் காலத்தில் எவ்வளவோ நெருக்கடிகள் வந்து இருக்கலாம், அதை விட இன்றைக்கு சதிகாரார்கள் இந்தஅரசுக்கு ஒரு நற்பெயர் வந்து விடக் கூடாது. முதல்வர் அவர்களின் நிர்வாகத் திறமையைப் பார்த்து, இன்றைக்கு அவர் பொறுப்பேற்றுக் கொண்ட காலத்தில் சொன்னார். 2021, 7 ஆம் தேதி 5 வது மாதம் அவர் முதலமைச்சராக பொறுப்பேற்ற போது சொன்னார். ஆளுநர் மாளிகையில் பத்திரிகையாளர்கள் சந்திப்பில், “என்னுடைய அரசைப் பொறுத்த வரையில். எனக்கு வாக்களித்தவர்களுக்கு மட்டும் அரசாக இருக்காது, நான் வந்துவிடக் கூடாது, முதலமைச்சராகக் கூடாது, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்து விடக் கூடாது என்று எதிர்த்து வாக்களித்தவர்கள் கூட நன்றி செலுத்துகின்ற ஒரு அரசாக இந்த அரசு இருக்கும் என்பது மட்டுமல்ல, அவர்களே இப்படிப்பட்ட ஒரு நல்ல முதலமைச்சருக்கு நாம் ஆதரவு தராமல் மற்றவர்களுக்கு வாக்களித்தோமே என்று எண்ணக் கூடிய அளவிற்கு, என்னுடைய அரசின் செயல்பாடுகள் பாராபட்சமின்று இருக்கும்” என்று சொல்லி , அதைப் போல இன்றைக்கு தொடர்ந்து இந்த அரசை வழிநடத்துகின்ற முதலமைச்சர்நமது முதலமைச்சர்.

நம்பர் ஒன் முதல் அமைச்சர்!

இதன் காரணமாக இந்தியாவில் இன்றைக்கு 28க்கு மேற்பட்ட மாநிலங்கள் இருக்கிறது. அனைத்து மாநில முதலமைச்சர்களும் நம்பர் ஒன் முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர் என்று பாராட்டப்படுகிறார். இவை எல்லாம் எதிரிகளுக்கு வயிற்றெரிச்சல். அப்போதும் நமது முதல்வர் அவர்கள் தன்னடக்கத்தோடு சொல்கிறார். “நான் இந்த நாட்டில் நம்பர் ஒன் முதலமைச்சராக பாராட்டப்படுவது எனக்கு பெருமை, மன நிறைவைத் தருவதல்ல, என்றைக்கும் தமிழ் நாடு இந்தியாவின் முதன்மை மாநிலமாக வருகிறதோ, அந்தச் செய்தி வருகிறதோ, அது தான் எனக்குப் பெருமை, மனநிறைவை தரும் என்று சொல்லக் கூடிய ஒரு முதலமைச் சராக தன்னடக்கத்தோடு நம்முடைய தலைவர், முதலமைச்சர் அவர்கள் இந்த அரசை வழி நடத்திக் கொண்டிருக்கிறார்.

இரவு பகல் பாராமல், கலைஞர் அவர்கள் தான் சொல்வார்கள். “ஓய்வில்லாமல் உழைக்கக் கூடியவர் ஸ்டாலின்” என்று. நான் கலைஞரை குறைத்து மதிப்பிடுவதாக யாரும் நினைத்து விட வேண்டாம். அண்ணா அவர்களை குறைத்து மதிப்பிடுவதாக யாரும் நினைத்து விட வேண்டாம். அவர்களை எல்லாம் கடந்த ஒரு உழைப்பாளியாக, அவர்களையெல்லாம் கடந்த ஒரு சாதனையாளராக அவர்களையெல்லாம் கடந்த ஒரு ஜனநாயகத்தினுடைய பாதுகாவலராக மாண்புமிகு கழகத் தலைவர் முதல்வர் அவர்கள் விளங்கி வருகிறார் என்பதை நீங்கள் நன்கு உணர்வீர்கள்.

நல்லாட்சி நடத்தும் நமது முதல்வர்!

அந்த அளவிற்கு ஒரு மன வலிமை பெற்றவராக, இன்றைக்கு ஒன்றியத்திலே ஆளக்கூடிய ஒன்றிய அரசு பா.ஜ.க. அரசு, தமிழ்நாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசுக்கு இவ்வளவு வலிமை இருக்கிறதே என்பதையெல்லாம் அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஆகவே அவர்கள் எந்தெந்த வகையில் இந்த அரசுக்கு இடையூறு செய்யலாம், எப்படியெல்லாம் இந்த அரசுக்கு வருகின்ற நற்பெயரை தடுத்து நிறுத்தலாம் என்று சதி திட்டம் தீட்டுகின்ற இந்த ஆட்சியாளர்கள் மத்தியிலும், இன்றைக்கு இத்தகைய நல்ல அரசை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழிநடத்துகிறார் என்பதை நாம் நன்கு உணர முடியும்.

ஒன்றிய அரசுக்கு எங்கிருந்து வருவாய் வருகிறது. இந்தியாவில் இருக்கின்ற மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் இவர்கள் மூலமாக வசூல் செய்கின்ற அந்த வரிகள் தான் ஒன்றிய அரசுக்கு நிதியாகப் போகிறது. ஆகவே இன்றைக்கு அனைத்து மாநிலங்களும் செலுத்துகின்ற வரியெல்லாம் ஒப்பிட்டு பட்டியலிட்டுப் பார்த்தால் இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் இரண்டாவது இடத்தில் அதிக வரியைச் செலுத்தும் மாநிலமாகும். மகாராஷ்டிரா முதல் இடத்தில் வரியைச் செலுத்துகிறது.

நிதி பகிர்வில் ஒன்றிய அரசின் வஞ்சகம்!

இரண்டாவது இடத்தில் இருந்து அதிக வரியை செலுத்துகின்ற தமிழகத்தை புறக்கணிக்கின்ற காரியத்தை நிதி பகிர்வில் மோடி தலைமையிலான அரசு செய்து கொண்டிருக்கிறது என்றால் அது உண்மையிலேயே கண்டிக்கக் கூடிய காரியம் இல்லையா?

மூன்றாவது மொழிக் கொள்கையாக அவர்கள் இந்தியைத் திணிக்க வேண்டும் என்று அவர்கள் முயற்சிக்கிறார்கள். சமஸ்கிருதத்தை படிக்க வேண்டும் என்று நிர்பந்தம் செய்கிறார்கள். உலக நாடுகள் பல நாடுகளிலும் ஆட்சி மொழியாக இருக்கிறது நம்முடைய தமிழ்மொழி. செம்மொழி அங்கிகாரம் பெற்ற தமிழ்மொழி. பல நாடுகளில் நிர்வாகத்தில், பேச்சு வழக்கில் , ஆட்சி மொழியாக, அங்கிகாரம் பெற்ற தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு 100 கோடி, 200 கோடி தருகிறார்கள். ஆனால் யாராலும் பேச்சு வழக்கில் இல்லாத சமஸ்கிருத மொழியை வளர்க்க வேண்டும் என்பதற்காக பல ஆயிரக்கணக்கான கோடிகளை தருகிறார்கள். தமிழும் தமிழர்கள் என்றால் அவர்களுக்கு கசக்கிறது.

ஆகவே அப்படிப்பட்டவர்களை பார்த்தால் நமக்கும் கசக்கிறது. இருமொழிக் கொள்கை கொண்டது நம்முடைய தமிழ்நாடு. ஏதோ இன்று நேற்றல்ல இந்த மொழிக்காக உயிரைக் கொடுத்த ஒரு இனம் இருக்கிறது என்றால் அது தமிழ் இனம் தான். தங்களுடைய உடலை தீக்கிரைக்கு பலியாக்கிக் கொண்டவர்கள் தான் நம்முடைய தமிழர்கள். உயிரைக் கொடுத்து தமிழ்மொழியைக் காத்தவர்கள் தான் தமிழர்கள். இப்போது இந்த மொழியை அழிக்க நினைக்கின்ற சக்திகளிடமிருந்து தமிழ்மொழியைக் காக்கின்ற வளர்க்கின்ற மகத்தான காரியத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செய்து வருகிறார்.

அதே போல இன்றைக்கு 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்றிருக்கிறார்கள். அந்த நாடாளுமன்றத்தை நம்முடைய 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தான் இன்றைக்கு நாடாளுமன்றத்தையே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகேவே இதனுடைய எண்ணிக்கையை குறைக்க வேண்டும் என்று தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையை 28 ஆகவும் 30 ஆகவும் பாண்டிச்சேரியையும் சேர்த்து குறைக்க வேண்டும் என்று அடுத்து ஒரு திட்டம் போடுகிறார்கள்.

தமிழ்நாட்டை எந்த அளவிற்கு வஞ்சிக்க வேண்டும். தமிழ்நாட்டை எந்த அளவிற்கு பழி வாங்க வேண்டும் என்பதற்காக திட்டங்களை போட்டு தீட்டுகிறார்கள். தொகுதி மறு சீரமைப்பு என்று பார்த்தால் அதில் நமது நாடாளுமன்ற தொகுதிகள் குறைய வாய்ப்பிருக்கிறது. அதற்காக குரல் கொடுக்கிறார் நம்முடைய முதல்வர் அவர்கள்.

பல்வேறு மொழி, கலாச்சாம் கொண்ட நாடு, நமது இந்திய நாடு. இன்றைக்கு இந்தியாவிற்கு உலக அரகில் ஒரு நற்பெயர் உண்டு. இந்தியா மிகப்பெரிய நாடு, சைனாவிற்கு அடுத்து மக்கள் தொகையில் பெரிய நாடாக நாம் தான் இருக்கிறோம். இது ஒரு ஜனநாயக நாடு.

பழனிச்சாமி ஆட்சியில் உரிமைகளை பறிகொடுத்தோம்.

நம்முடைய இயக்கத்தைத் தொடங்கிய அண்ணா, கலைஞர் இன்றைக்கு இல்லை. ஆனால் தளபதி அவர்கள் இந்த இயக்கத்தை வழி நடத்துகிறார். ஆனால் அதே நேரத்தில் எம்.ஜி.ஆர்.,அ.தி.மு.க.வைத் தொடங்கினார். அவருடைய மறைவிற்குப் ஜெயலலிதா வந்தார். அவருடைய மறைந்த பிறகு நான்கரை ஆண்டு காலம் அந்த ஆட்சி நடந்ததா இல்லையா? பழனிச்சாமி தலைமையில் யாருடையதயவினால் நடந்தது, பாரதிய ஜனதா கட்சியின் தயவினால் அந்தஆட்சி நடைபெற்றது. நான்கரை ஆண்டுகள் இவர்கள் அடித்த கொள்ளைகள் ஏராளம். கொள்ளை அடித்தது மட்டுமல்ல நம்முடைய தமிழ்நாட்டின் மாநில உரிமைகள் பலவற்றை இன்றைக்கு ஒன்றிய அரசுக்கு தாரை வார்த்து கொடுத்தவர்கள் தான் பழனிச்சாமி தலைமையிலான அரசு. அவர்களைப் பொறுத்த வரையில் நம்முடைய உரிமைகளை பரிப்பது தான் அவர்களுடைய நோக்கம். இவர்களைப் பொறுத்த வரைபழனிச்சாமி கம்பனியைப் பொறுத்தவரை இந்த நாட்டில் நாம்அதிகாரத்தில் இருந்து, கொள்ளை அடிக்க வேண்டும் என்பது தான், இப்படி உரிமையைப் பரிகொடுத்து கொள்ளைக் கூட்டம் நடத்திய ஆட்சி கொள்கையற்ற கூடாரம் தான் பழனிச்சாமி அவர்கள்.

ஜனநாயகத்தை காப்பாற்றுகின்ற தலைவராக நமது முதல்வர் இருக்கிறார். தமிழ்நாட்டை மட்டுமல்ல அகில இந்திய அளவில் இன்றைக்கு மிகப்பெரிய ஒரு சக்தி மிக்க தலைவராக, அகில இந்திய அளவில் பல்வேறு அகில இந்திய கட்சிகள் இருந்தாலும் கூட, அவைகளையெல்லாம் ஒன்று சேர்க்கின்ற ஒரு மாநிலக் கட்சியினுடைய தலைவராக கலைஞர் அவர்களைப் போல் நம்முடைய தலைவர்அவர்கள் இருக்கிறார். அதன் மூலமாக கலைஞர் அவர்களுடைய புகழை நிலைநாட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆட்சிக்காக நம்முடைய மாநில உரிமைகளை எல்லாம் பறி போகின்ற வகையில் அ.தி.மு.க. இருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும். அதே போல இன்றைக்கு அண்ணாவும் கலைஞரும் மறைந்த போது இந்த இயக்கத்தை வழி நடத்துகின்ற வலிமை மிக்க இயக்கமாக முன்னெடுக்கக் கூடிய தலைவராக தளபதி அவர்கள் இருக்கிறார்கள்.

ஆகவே எல்லா வகையிலும் இந்த அரசை வழி நடத்துவதில் நமது முதலமைச்சர் முன்மாதிரியாக இருக்கிறார். கலைஞர் எப்படி இந்த நாட்டின் முதலமைச்சராக இருந்த நேரத்தில் தான் அனைத்து கிராமங்களுக்கும் மின்சாரம் கொண்டுபோய் சேர்த்தார். அனைத்து கிராமங்களுக்கும், குக் கிராமங்களுக்கும் சாலை வசதி ஏற்படுத்தித் தந்தார். பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீரை நகரப் பகுதிகளில் மட்டுமல்லாமல் கிராமப் பகுதிகளுக்கும் கொண்டு போய் சேர்த்த பெருமையும் கலைஞர் அவர்களையே சாரும்.

ஆனால் இன்றைக்கு வடக்கே சென்று பார்தால் , நம்முடைய வளர்ச்சியில் ஒரு 40 சதவிகிதம் கூட இருக்காது. ஆகவே தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கு, அடிப்படை கட்டமைப்புகளை பெருக்குவதில் நிர்வாகத் திறமை மிக்க கலைஞர் அவர்கள் விளங்கியதைப் போல, இன்றைக்கு முதலமைச்சராக இருந்து தளபதி அவர்கள் பல்வேறு சீரிய திட்டங்களை, தேர்தல் களத்தில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றிய முதலமைச்சர் என்பதையும் கடந்து சொன்னதை செய்து, சொல்லாததையும் செய்து காட்டிய முதலமைச்சராக விளங்கிக் கொண்டிருக்கிறார்.

இன்றைக்கு இந்தியாவில் இருக்கக் கூடிய பிற மாநிங்களில் எல்லாம் தமிழ்நாட்டை பின் பற்றும் திட்டங்கள் மட்டுமல்ல உலக நாடுகளே பின்பற்றக் கூடிய திட்டங்களை நமது முதல்வர் அவர்கள் கொண்டு வந்து இருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள் பேசினார்.

சென்னை, தலைமைச் செயலகத்தில் நேற்று (02.05.2025) வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் அனைத்து துறைத் தலைவர்களுடன் வேளாண்மை உழவர் நலத் துறையின் அறிவிப்புகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் வி. தட்சினாமூர்த்தி, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி. குமரவேல்பாண்டியன், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆணையர் டி. ஆப்ரகாம், சர்க்கரைத் துறை இயக்குநர், டி. அன்பழகன், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக பதிவாளர் / துணை வேந்தர் (பொறுப்பு) டாக்டர் ஆர், தமிழ்வேந்தன், வேளாண்மைப் பொறியியல் துறை தலைமைப் பொறியாளர்கள் இரா. முருகேசன், தலையைப் பொறியாளர் (வே.பொ) சந்திரசேகரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பல்லாவரம் சட்டமன்ற தொகுதியில் குரோம்பேட்டை திருக்குறள் பேரவை சார்பில் பல்லாவரம் இ.கருணாநிதி எம்.எல்.ஏ ஏற்பாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாபெரும் பட்டிமன்றம் பள்ளி மாணவ – மாணவிகளுக்கு இடையே திருக்குறள் ஒப்பித்தல் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும் மற்றும் கல்வியில் சிறப்பாக செயல்படும் அரசு பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு பரிசளித்தல் விழா குரோம்பேட்டை தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா.மோ அன்பரசன் கலந்து கொண்டு பட்டிமன்றத்தை துவக்கி வைத்து மாணவ – மாணவிகளுக்கு ஆசிரியர் பெருமக்களுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினார். உடன் கழகத் தீர்மான குழு செயலாளர் மீ.அ. வைத்தியலிங்கம் துணை மேயர் கோ. காமராஜ் மண்டல தலைவர்கள் இ.ஜோசப் அண்ணாதுரை வே. கருணாநிதி பகுதி கழகச் செயலாளர்கள் த. ஜெயக்குமார் இ.எஸ். பெர்னார்ட் ஏ. கே. கருணாகரன். ஓய்வு பெற்ற அரசு அதிகாரிகள் திருக்குறள் பேரவை நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் ஆகியோர் இருந்தனர்.

மரக்காணம் ஒன்றியத் தலைவர்

தயாளன் துணைவியார் பேபி அம்மாள் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி

மரக்காணம், மே 3- மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் துணைவியார் ஒன்றிய கவுன்சிலர் பவித்ரா தயாளன் தாயார் பேபி அம்மாள் உடல் நலக் குறைவால் மறைவெய்தினார். அவரது உடலுக்கு தி.மு.க.வினர் அஞ்சலி செலுத்தினர்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவரும்,மரக்காணம் கிழக்கு ஒன்றிய செயலாளர் தயாளன் மனைவியும், ஒன்றிய கவுன்சிலர் பவித்ரா தயாளனின் தாயாருமான பேபி அம்மாள் வயது 60. இவர் சென்னை வேளச்சேரியில் தனது மகன் கணேசன், மருமகள் இந்துஜாவுடன் வசித்து வந்தார். உடல் நலம் பாதிக்கப்பட்ட பேபி அம்மாள்நேற்று அதிகாலை 4.00 மணி அளவில்உயிரிழந்தார். இதையடுத்து அவரது உடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இன்று 3.5.2025 மதியம் 2 மணிக்கு உயிரிழந்த பேபி அம்மாள் உடலைஊர்வலமாக கொண்டு சென்று

வேளச்சேரி சுடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது. உடல் நலக்குறைவால் உயிர் இழந்த பேபி அம்மாள் உடலுக்கு தி.மு.க. நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் உள்ளிட்டோர் நேரில் சென்று மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.